# 2 சமய வாழ்வு

வாழ்க்கை வேறு சமயம் வேறு என்று கருத முடியாத அளவுக்கு நமது வாழ்க்கை, சமயத்தினால் மெருகூட்டப்பட்டுள்ளது. குறிப்பாகச் சைவ சமயிகளாகிய நமது வாழ்வியற் கருமங்கள் யாவும் இறை சிந்தனையுடனேயே ஆரம்பித்து இறை சிந்தனையுடனேயே நிறைவெய்துகின்றன. நமது முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய வழியின்பால் நமது வாழ்வு சமயத்துடன் பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுகிறது. அதாவது நாயன்மார்கள், சமயச் சான்றோர்கள், அநுபூதிச் செல்வர்கள் என்போர் வாழ்ந்து காட்டிய வழியில் நமது வாழ்வை அமைத்துக் கொள்வோமானால் எந்நாளும் இன்பமே கைகூடும்.

நமது அன்றாட கருமங்களில் இறை சிந்தனையுடன் நெறிப்படுத்தி செயலாக்கம் பெறும் இடங்களாக மேல்வரும் மூன்று இடங்கள் அமைகின்றன.

**அ. வீடு**

**ஆ. பாடசாலை**

**இ. ஆலயம்**

இவை ஒவ்வொன்றும் சைவசமயி ஒருவனது வாழ்வில் எங்ஙனம் இறைசிந்தனையை மேம்படுத்துகின்றன என்பதனை இனி, நோக்குவோம்.

## அ. வீட்டில் சமயம்

சைவசமயிகளாகிய நமது இல்லங்கள் தோறும் இடம்பெறும் அனைத்து கருமங்களும் இறை சிந்தனையுடன் தொடர்புபட்டனவாக அமைகின்றன. நம்மால் ஆற்றப்படுகின்ற கடமைகளை மேல்வரும் இரு நிலைகளுடாக அவதானிக்கலாம்.

1. **வீட்டில் இடம்பெறும் நாளாந்தக் கடமைகளில் சமயம்**
2. **வீட்டில் இடம்பெறும் விசேட கடமைகளில் சமயம்**

### 1. வீட்டில் இடம்பெறும் நாளாந்த கடமைகளில் சமயம்.

நமது இல்லங்களில் இடம்பெறும் அன்றாடக் கருமங்கள் யாவும் இறைசிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன. அதிகாலையில் நித்திரை விட்டெழுந்ததும் **சிவ சிவ** என்று சொல்லிக் கொண்டே எழுகிறோம். அந்நேரத்தில் எங்களை அறியாமலே வழிபாடு தொடங்குகிறது. சூரியனைப் பார்த்து சூரிய நமஸ்காரம் செய்தல்; வீட்டைக் கூட்டி, பெருக்கி சுத்தம் செய்த பின்னர் மஞ்சள் நீர், சாணம் கலந்த நீர் என்பவற்றால் எம் வீட்டையும் வளவையும்

தூய்மையாக்குகிறோம். தூய்மையான நீரில் நீராடிய பின்னர் சுவாமி அறையிலுள்ள தெய்வப்படங்களுக்குப் பூவும் நீரும் வைத்து, தூப தீபம் காட்டி, தோத்திரப் பாடல்களைப் பாடி இறையருளை வேண்டி நிற்கிறோம். அதன் பின்னர் வீபூதியை சிவ சிவா எனக் கூறிக்கொண்டு நெற்றியில் தரிக்கிறோம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் வீபூதி தரிக்க வேண்டிய நேரங்கள் பற்றி சைவ வினாவிடை முதலாம் பாகத்தில் கூறியுள்ளார்.

கொல்லாமையை வலியுறுத்தும் சைவ சமயிகள் அனைவரும் உயிர்களிடத்து ஜீவகாருண்யம் மிக்கவர்களாகத் திகழ வேண்டும். வீட்டில் உள்ள பசு முதலான பிராணிகளுக்கு உணவளித்தல், அவற்றைத் தெய்வங்களாகக் கருதுதல், நமது வீடு தேடி வரும் துறவியருக்கும் மற்றும் வறியவருக்கும் இன்முகத்தோடு உணவளித்தல், பிறரிடத்தில் இனிய வார்த்தைகள் பேசுதல், இறைவனது பூசைக்குரிய மலர்களைப் பெறும் முகமாக நந்தவனம் அமைத்து அங்கு வளரும் பூங்கன்றுகளுக்கு இறை சிந்தனையுடன் நீர் பாய்ச்சுதல், துளசி மாடம் அமைத்துத் துளசிச்செடியை வலம் வந்து வணங்குதல் என்பன எல்லாம் இறைசிந்தனையுடன் கூடியதான நமது அன்றாடக் கடமைகளாகும்.

**யாவர்க்குமாம் இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசு விற்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே.**

என்ற திருமூலரது திருமந்திரப் பாடலுக்கு அமைய யாவர்க்கும் நன்மை பயக்கும் இறைவனுக்கு ஒரு பச்சிலை இட்டாவது வணங்குங்கள்; எல்லோருக்கும் பால் கொடுக்கும் பசுவுக்கு பசும்புல்லாயினும் கொடுங்கள்; சாதி பேதம் பாராது பசி என்று வந்தவர்களுக்கு நீங்கள் உண்ணுவதற்கு முன்னர் ஒரு பிடி சோறாவது கொடுங்கள் பிறருக்கு இன்னுரை பேசுதல் யாவருக்குமே நன்மையாகும்; இவ்வாறான செயல்களெல்லாம் இறை சிந்தனையின் பாற்பட்டவையாகும்.

நாம் உணவை உண்பதற்கு முன்னர் அவ்வுணவைத் தந்தமைக்காக இறைவனைத் துதித்த பின்னரே உண்பதை நம் வழக்கமாக்கிக் கொண்டுள்ளோம்.

**அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்**
**பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை**
**என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற**
**இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே**

என்ற திருநாவுக்கரச நாயனாரது தேவாரத்தினை ஓதிய பின்னர் உணவை உண்ணும் வழக்கத்தினை நம் முன்னோர்கள் கையாண்டனர்.

மாலை வேளைகளில் விளக்கினை ஏற்றித் தூபதீபம் இட்டு திருமுறைப்பாடல்களைப் பாடுதல், நித்திரைக்குச் செல்வதற்கு முன்னர்

இறைவனைத் துதித்தல், அன்றைய நாள் முழுவதும் செய்த செயல்களை எண்ணிப்பார்த்து அவற்றில் தவறு விடப்பட்ட செயல்களுக்காக இறைவனை மன்றாடித் துதித்தல், என்பன எல்லாம் நமது இல்லங்கள் தோறும் அன்றாடம் ஆற்றப்படும் இறைசிந்தனையுடன் கூடிய செயல்களாகும்.

## 2 வீட்டில் இடம்பெறும் விசேட தினங்களில் சமயம்.

நமது வீட்டில் நாளாந்தம் இடம்பெறும் செயற்பாடுகள் இறை சிந்தனையுடன் கூடியதுபோல் விசேட தினங்களில் ஆற்றப்படும் செயல்களும், இறை சிந்தனையுடன் நமது கலாசாரத்தினைத் தழுவியனவாக அமைகின்றன. விரதங்கள், பண்டிகைகள், சடங்குகள் ஆற்றப்படும் விசேட காலங்களில் அச்செயற்பாடுகள் ஊடாக இறை சிந்தனை மேலோங்கிக் காணப்படுகின்றது.

சிவராத்திரி, பிரதோஷம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, திருவாதிரை, கந்தசஷ்டி, திருவெம்பாவை முதலான விரத காலங்களிலும் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி முதலான பண்டிகைக் காலங்களிலும் நாம் நமது வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் தூய்மையாக்குவதோடு இறை சிந்தனையுடன் மருத்து நீர் வைத்து நீராடி, தோய்த்துலர்ந்த அல்லது புதிய ஆடைகளை அணிந்து வாசலில் மாக்கோலம் இடுதல், மாவிலைத் தோரணம் கட்டுதல், கும்பம் வைத்தல், புதிய பாத்திரங்களில் சமைத்த உணவை இறைவனுக்கு நிவேதித்தல், குறித்த விரதத்துக்குரிய தோத்திரப் பாடல்களைப் பாடுதல் என்பன எல்லாம் விசேட காலங்களில் இறை சிந்தனையுடன் ஆற்றப்படும் செயல்களாகும்.

சைவ சமயி ஒருவரது பிறப்பிலிருந்து இறப்பு வரையும் அதன் பின்னரும் ஆற்றப்படும் அனைத்துச் சடங்குகளும் இறைசிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன. இத்தகைய சடங்குகள் பூர்வ கிரியைகள், அபரக் கிரியைகள் என இரு வகைப்படும்.

உயிர் உடலில் இருக்கும் போது ஆற்றப்படுகின்ற கிரியை பூர்வக் கிரியை எனப்படும். பெயர் சூட்டுதல், ஏடு தொடக்குதல், உபநயனச்சடங்கு, திருமணச்சடங்கு என்பன இவற்றுள் சில. அச்சடங்குகள் அனைத்தும் இறைசிந்தனையுடனையே ஆற்றப்படுகின்றன. பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டும் போது பெயர் இறைவனதும் அல்லது இறை அடியார்களினதும் திருப்பெயர்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பர். குழந்தைக்கு முடி இறக்குதல், உணவு ஊட்டுதல் போன்றவற்றையும் புனித ஆலயங்களில் இடம்பெறச் செய்வர். திருமணச்சடங்கில் அட்டதிக்குத் தேவதைகளின் ஆசி, முன்னோர்களின் ஆசி என்பன பெறப்படுவதோடு மணமகனையும், மணமகளையும் சிவ சக்தியாகக் கருதி ஆசீர்வதிப்பர்.

உயிர் உடலை விட்டுப் பிரிந்ததும் ஆற்றப்படும் அபரக் கிரியைகளில் மரணச்சடங்கு பிரதானமானது. இறந்த ஆன்மாவை இறைவனுடன்

இரண்டறக்கலக்கச் செய்யும் முகமாக இங்கு பல கிரியைகள் இடம்பெறும். அதாவது சீவனை சிவனாகப் பாவித்து அக்கிரியைகள் தொடரப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து ஆற்றப்படும் காடாற்று, அந்தியேட்டி, மாளயம் முதலான கிரியைகளும் ஆன்மாவை மோட்சத்துக்கு இட்டுச்செல்லும் முகமாக இறைசிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன.

## ஆ. பாடசாலையில் சமயம்

வீட்டில் எமது பெற்றோர்களின் மூலம் பெற்றுக் கொண்ட சமய ஆன்மீக மரபுகளை மேலும் மெருகூட்டும் இடமாகப் பாடசாலை அமைகின்றது. பாடசாலையில் ஆற்றப்படும் பலதரப்பட்ட செயற்பாடுகள் இறைசிந்தனையுடனேயே ஆற்றப்படுவதை நாம் அனைவரும் அறிவோம்.

பாடசாலை அன்றாடச் செயலொழுங்கில் காலைப்பிரார்த்தனை, வகுப்பறையிலுள்ள சுவாமிப் படங்களுக்கு மலர் தூவி விளக்கு ஏற்றுதல், ஆசிரியர் வகுப்புக்கு வரும் போது எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தல், எழுதும் போது பிள்ளையார் சுழி இடல், பாடசாலை நிறைவுறும் போது பிரார்த்தனையுடன் நிறைவுறச் செய்தல் போன்ற நாளாந்த செயற்பாடுகள் அனைத்தும் இறைசிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன. விசேடமாக பாடசாலைக்கு அருகிலுள்ள ஆலயத்துக்குச் செல்லுதல், அங்கு இடம்பெறும் பூசை விழாக்களில் மாணவர்கள் பங்கேற்றல் என்பன இறைசிந்தனையுடன் ஆற்றப்படும் செயல்களாக அமைகின்றன.

### பாடசாலையில் சமய விழாக்களை ஆற்றுவதன் முக்கியத்துவம்

சைவ சமய மாணவர்களாகிய நாம் எமது பாடசாலையில் பல சைவ சமய விழாக்களை மேற்கொள்கின்றோம். சிவராத்திரி விழா, நவராத்திரி விழா, நாயன்மார் குருபூசை என்பன அவற்றுள் சிலவாகும்.

பாடசாலைகளில் சமய விழாக்களை நடாத்தும் போது மாணவர்கள் மத்தியில் இலைமறைகாயாக மறைந்திருக்கும் பலதரப்பட்ட திறமைகளை வெளிக்கொணர வாய்ப்பு ஏற்படுகிறது. நவராத்திரிக் காலங்களில் இடம்பெறும் ஒன்பது நாள் பூசைகளும் ஒவ்வொரு வகுப்பு மாணவர்களது உபயமாக ஆற்றப்படுவதை நீங்கள் அறிவீர்கள். அப்போது தலைமைத்துவம், பொறுப்புணர்வு, குழு ஒருமைப்பாடு ஆகிய விழுமியங்கள் மாணவர் மத்தியில் உருவாகின்றன. கோலமிடுதல் போட்டி, மாலைகட்டுதல் போட்டி, தோரணம் கட்டுதல் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் பண்ணிசைப் போட்டி எனச் சமய சார்பான போட்டிகளை மாணவர்கள் மத்தியில் நடாத்துகின்ற போது இதுவரை காலமும் தமது திறமைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கப் பெறாத மாணவர்கள் திறமைகளை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

வீடுகளில் சமய நிகழ்வுகளை ஆற்றும் போது வீட்டுக்கு வீடு கிரியைகளும் சடங்கு முறைகளும் அவற்றை ஆற்றும் முறைமையும் சற்று மாறுபட்டுக் காணப்படலாம். அதனால் சமய விழாக்களைச் சரியான முறையில் நிகழ்த்துவது என்பதனைப் போதிக்கும் இடமாகப் பாடசாலை அமைகின்றது.

மாணவர்கள், பாடசாலையில் ஆற்றப்படுகின்ற சமய விழாக்களின் போது அங்கே பேசப்படுகின்ற நற்சிந்தனைகள், பிரசங்கங்கள் என்பவற்றைப் பாடசாலையின் சட்ட திட்டங்களுக்கமைய அவற்றை செவிமடுக்கின்றனர். இந்நிலையை கோயிலிலோ வீட்டிலோ ஏற்படுத்துவது அரிதாகவே காணப்படும்.

நாயன்மார்களது குருபூசை மற்றும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது குருபூசை என்பனவற்றைப் பாடசாலைகளில் ஆற்றும் போது, இளமைப் பராயத்திலிருந்தே குறித்த மெய்யடியார்கள் நமது சமயத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை எண்ணிப்பார்ப்பதற்கும் அவர்கள் ஆற்றிய வழியினின்று தாமும் தமது சமூகத்தில் சைவ சமய விழுமியங்களை முன்னெடுக்க வேண்டுமென்ற உள்ளார்ந்த உந்தல்கள் மாணவர்கள் மத்தியில் தோன்றுவதற்கும் இவ்விழாக்கள் வழிவகுக்கின்றன.

தமது பாடசாலை உபயமாக அயலிலுள்ள ஆலயமொன்றில் இடம்பெறும் திருவிழா ஒன்றினைப் பொறுப்பேற்று நடத்துதல், இவ்விழாவில் அனைத்து மாணவர்களும் கலந்து கொள்ளுதல், இவ்வாலயத்துக்கு வேண்டிய திருப்பணிகளுக்கு உதவுதல், என்பவற்றின் மூலம் இறைசிந்தனையுடன் மாணவர்கள் செயலாற்ற வழிவகுக்கப்படுகின்றன. நமது நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்களில் ஒன்றாகிய திருக்கேதீச்சர ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தினை, நாட்டில் உள்ள முன்னணிச் சைவப்பாடசாலைகளின் மாணவர்கள் ஒவ்வொரு திருவிழாவையும் தமது உபயமாக ஆற்றுவது அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## இ. கோயிலும் சமயமும்

காலத்தால் முற்பட்ட சமயமாகிய நமது சைவம் இன்றளவும் நிலைத்து எம்மையெல்லாம் சீரிய வழியில் நெறிப்படுத்திச் செல்வதற்குக் காரணம், அந்நெறி கூறும் ஒழுக்கங்கள் செயலாக்கம் பெறும் ஆலயங்களாலேயே எனலாம். எமது சைவ சமயத்தையும் ஆலயங்களையும் வேறுபடுத்திப்பார்க்க முடியாத அளவுக்கு அவை பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூவகைத் திருமேனிகளையுடைய இறைவனை உருவமாகவும் அருவுருவமாகவும் வழிபடத்தக்க இடமாக ஆலயம் அமைகிறது. அத்தகைய ஆலயங்களை நீக்கி விட்டு எமது சைவ சமய வளர்ச்சியை நோக்குவோமாயின் அது இயலாததாக அமையும். அந்தளவுக்குச் சைவ சமய வளர்ச்சியில் ஆலயமும் ஆலயங்களின் வளர்ச்சியில் சைவ சமயமும் பின்னிப் பிணைந்தவையாகக் காணப்படுகின்றன.

**நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்கு**
**புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி**
**சங்கராசய போற்றி போற்றி என்றும்**
**அலைபுனல்சேர் செஞ்சடை எம் ஆதி என்றும்**
**ஆரூராவென்றென்றே அலறா நில்லே.**

என்ற நாவுக்கரசரது தேவாரத்தில் ஆலய வழிபாட்டின் அவசியம் உணர்த்தப்படுகிறது. சைவ சமயம் கூறும் அனைத்து வழிபாட்டு நிகழ்வுகளும் அதிகளவில் செயலாக்கம் பெற்று நடைமுறைப்படுத்தப்படும் இடங்களாக ஆலயங்களே அமைகின்றன. அதனாலே தான் ஆன்மாக்கள் லயப்படும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயங்களில் இடம்பெறும் கிரியைகள் நித்திய கிரியைகள், நைமித்திய கிரியைகள் காமியக் கிரியைகள் என இருவகைப்படும். நித்திய கிரியைகள் பயன் கருதாது ஆலயத்தில் அன்றாடம் கிரம ஒழுங்கில் ஆற்றப்படும் கிரியைகள் ஆகும். திருவனந்தல், காலை, உச்சி, மாலை, இரண்டாம் சாமம், அர்த்த சாமம் என ஆறு காலங்களில் ஆற்றப்படும் பூசைகள் குறிப்பிடத்தக்கனவாகும். சில ஆலயங்களில் ஆலயத்தின் வசதிக்கேற்ப ஒரு வேளைப் பூசை, இருவேளைப்பூசை, மூன்றுவேளைப் பூசை என்பன இடம்பெறும். திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் பன்னிரண்டு வேளை பூசைகள் இடம்பெறுகின்றன.

விசேட காலங்களில் பயன் கருதி ஆற்றப்படுகிற கிரியைகள் நைமித்திய கிரியைகள் ஆகும். அதாவது வருடாந்த மகோற்சவம், தைப்பூசம், சிவராத்திரி, புதுவருடப்பிறப்பு, நவராத்திரி, கந்த சஷ்டி, திருவெம்பாவை முதலான காலங்களில் இடம்பெறுபவை.

காமியக் கிரியைகள் என்பது நித்திய,நைமித்திய கிரியைகள் தவிர்ந்து ஒருவர் தம் வேண்டுதலை நிறைவேற்றும் பொருட்டு செய்யபடுவதற்கும் இக்கிரியையும் உலக நன்மை கருதி செய்யப்படும் போது நிஷ்காமிய கிரியையாகும்.ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் தொடங்கி விட்டால் ஊர் மக்களது உள்ளங்களில் புதுவித குதூகலிப்பு ஏற்படுகிறது. அன்றாடம் உழைப்பதும் உண்பதுமான வாழ்க்கையில் சலிப்படையும் மக்களுக்கு இத்தகைய ஆலய விழாக்கள் புதுவித உற்சாகத்தையும், பூரிப்பையும் ஏற்படுத்த வல்லன. வீடுகள் புனிதமாக்கப்படுவதோடு பக்தி சிரத்தையுடன் விரதமிருந்து நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி அயலூர்களிலிருந்து விழாக்களைக் காணவரும் அடியவர்களை வரவேற்று அவர்களுக்கு விருந்துபசாரம் செய்தும் இன்புறுவர்.

ஆலயத்திலே ஊர் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி கோயிலையும் திருவீதிகளையும் சுத்தம் செய்து பழக்குலை வாழைகளை நாட்டி மகரதோரணங்களால் ஆலயத்தினை அலங்கரிப்பர். ஆலயத்தில் இடம்பெரும் மகோடற்சவம் இறறவனின் ஐந்தொழில் நினைவூட்டுகிறது. அங்குராப்பணம்,திருகல்யாணம், கொடியேற்றம், இராட்சாபந்தனம் ஆகிய

விழாக்கள் படைத்தலையும், வாகனத்திருவிழா, ஓமம், பலி என்பன காத்தலையும், சூர்ணோற்சவம், தேர் என்பன அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், ஊடல் திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பன அருளலையும் குறிக்கின்றன. அது போன்று கொடியேற்றத் திருவிழா முப்பொருள் தத்துவத்தை வெளிப்படுத்துவதாக அறிஞர்கள் குறிப்பிடுவர். கொடி மரம் பதியையும், கொடிச்சீலை பசுவையும், சீலையுடன் சேர்ந்த கயிறு பாசத்தையும் குறிக்கும்என்பர்.

## மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. உங்களது வீட்டில் இறைசிந்தனையுடன் இடம்பெறும் நாளாந்தக் கடமைகள் மூன்று தருக.

2. பாடசாலையில் சமய விழாக்களை நிகழ்த்துவதனால் மாணவர்கள் அடையும் நன்மைகள் இரண்டு தருக.

3. எவ்வாலயத்தின் மகோற்சவப் பெருவிழா பாடசாலை மாணவர்களால் ஆற்றப்படுகிறது?

4. பன்னிரண்டு வேளை பூசை இடம்பெறும் ஆலயம் யாது?

5. ஆலயங்களில் இடம்பெறும் மகோற்சவம் குறிக்கும் தத்துவத்தினை விவரிக்குக?

## செயற்பாடு

1. உமது பாடசாலையில் கொண்டாடப்படும் சமய விழாவினை நீர் தலைமைதாங்கி நடத்துவதாகக் கருதி அவ்விழாவுக்கான முன்னேற்பாடுகளை பட்டியல் படுத்தி வகுப்பறையில் சமர்ப்பிக்குக.

2. உமது ஊரில் உள்ள ஆலயத்தில் இடம்பெறும் வருடாந்த மகோற்சவ காலங்களில் ஊர் மக்களது செயற்பாடுகளை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்.

1. நமது செயற்பாடுகள் அனைத்தும் இறை சிந்தனையுடன் கூடியனவாக அமைதல் வேண்டும்.

2. வீட்டில் இடம்பெறும் நாளாந்த நிகழ்வுகளின் போதும் விசேட நிகழ்வுகளின் போதும் இறை சிந்தனையுடன் செயற்படுகிறோம்.

3. பாடசாலையின் அன்றாட, விசேட நிகழ்வுகள் இறை சிந்தனையுடன் ஆற்றப்படுவதோடு இந்நிகழ்வுகள் மூலம் மாணவர்கள் பலதரப்பட்ட திறன்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

4. சமய வாழ்வும் ஆலய நிகழ்வுகளும் ஒன்றோடொன்று வேறுபாடின்றிச் சைவமக்களை வளப்படுத்துகின்றன.